அசல் வழக்கு எண். 62/2022

நாள் : 01.04.2025

பி.வா.சா. : 1

பெயர் : சுப்ரமணியன்

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி என்றால் சரி. இந்த வழக்கின் விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரி. நான் என் சார்பாகவும் 1, 2 பிரதிவாதிகள் சார்பாகவும் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரி. வழக்கில் எதிர்வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞர் தட்டச்சு செய்து தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் 1, 2 பிரதிவாதிகளுக்கும் தெரியும் என்றால் சரி. எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவை உண்மையான சங்கதிகள் தான். இந்த வழக்கில் வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியும். என்ன பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றால் தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்று அறிவிக்க கோரியும், என்னுடைய உரிமையை ரத்து செய்யக்கோரியும், நான் வாங்கிய பட்டாவை ரத்து செய்யகோரியும், இடிந்த நிலையில் உள்ள வீட்டிற்கு 10 லட்சம் ரூபாய் நஷ்ட ஈடு கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து ஆதியில் வெங்கட்ராமனுக்கு சொந்தம். தாவா சொத்தை வெங்கட்ராமனிடமிருந்து யார் வாங்கியது என்றால் 2ம் பிரதிவாதி கணபதி, வெங்கட்ரமனின் பவர் ஏஜெண்ட் அருணாச்சலம் அங்குராயர் என்பவரிடம் கிரய உடன்படிக்கை போட்டார். அந்த கிரய உடன்படிக்கை 30.06.1981 அன்று ஏற்பட்டதாக சொல்கிறேன் என்றால்

சரி. அந்த உடன்படிக்கை படி தாவா சொத்திற்கு எவ்வளவு தொகை யாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் 26 ஆயிரம் கணபதி, அருணாச்சல அங்குராயருக்கு கொடுத்தார். அதன்பிறகு 2ம் பிரதிவாதி அந்த சொத்தை யாருக்கு கொடுத்தார் என்றால், 1ம் பிரதிவாதி சங்கரனிடம் 2ம் பிரதிவாதி கிரய உடன்படிக்கை போட்டார். எந்த தேதியில் என்றால் 06ம் மாதம் 1985ல் போட்டார் தேதி நினைவில்லை. அருணாச்சல அங்குராயரிடம் போட்ட கிரய உடன்படிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அதன் நகல் தாக்கல் செய்துள்ளோம். 1ம் பிரதிவாதி சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இந்த சொத்து குறித்து ஒரு வழக்கு தாக்கல் செய்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கு எண் சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும். OS. No. 235/2013. அந்த வழக்கில் யார் வாதி, பிரதிவாதி என்றால் அந்த வழக்கில் வாதி சங்கரன், பிரதிவாதிகள் கணபதி, ராஜமாணிக்கம் ஆகியோர். இந்த வழக்கில் சங்கரன் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சொத்தை தன்னிடம் ஒப்படைக்ககோரி வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கில் கண்ட தாவா சொத்து வெங்கட்ராமனுக்கு தான் சொந்தம் என்றோ அல்லது ராஜமாணிக்கத்திற்கோ வேறு யாருக்கோ சொந்தம் என்றோ சொல்லப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் இந்த சொத்து ஆதியில் வெங்கட்ராமனுக்கு சொந்தம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. OS. No. 235/2013 என்ற வழக்கு ராஜமாணிக்கம் தாவா சொத்து தனக்கு சொந்தமானது என்று தகராறு செய்ததால் அதை தடுக்க நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரி. அந்த சொத்து எந்த நாளிலும் ராஜமாணிக்கத்திற்கு

சொந்தமில்லை என்று சொல்கிறேனா என்றால் ஆமாம். அந்த வழக்கில் சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் என்ன தீர்ப்பு பிறப்பித்தது என்று எனக்கு தெரியுமா என்றால் சொத்தின் வசம் யாரிடம் உள்ளதோ அவரை யாரும் சட்டத்திற்கு புறம்பாக வெளியேற்றக்கூடாது என்று தீர்ப்பு பிறப்பித்தது. அந்த வழக்கில் வருவாய் துறையினரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி. அந்த வழக்கில் அந்த சொத்து அந்த வாதிக்கு சொந்தம் என்று விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரி. அந்த வழக்கில் பட்டாவை வாதி பெயருக்கு மாற்றிக்கொடுக்கவேண்டுமென்று எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் சரி. ஆனாலும் அந்த தீர்ப்பிற்கு பிறகு அந்த வழக்கின் வாதியான இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி அந்த சொத்தின் பட்டாவை தன் பெயருக்கு மாற்றிக்கொண்டார் என்றால் சரி. அந்த பட்டா மாறுதல் அடிப்படையில் தான் 18.06.2020 அன்று அந்த சொத்தை நான் கிரயம் வாங்கினேன் என்றால் சரி. தாவா சொத்தை நானும் என் முன்னோர்களும் 1981 முதல் அனுபவித்து வருகிறோம். எந்த தேதியில் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு கிரய உடன்படிக்கை ஏற்படுத்தி கொடுத்தார் என்ற விவரம் வாசாஆ 6 ஆவணத்தில் உள்ளதா என்றால் உள்ளது. 28.06.1985 அன்று கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்ததாக உள்ளது. வாசாஆ 6 ஆவணத்தில் அந்த சொத்து யாருக்கு சொந்தம் என்று எதாவது விவரம் உள்ளதா என்றால் இல்லை. அருணாச்சல அங்குராயரிடமிருந்து வாங்கியதாக உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து வெங்கட்ராம ஐயருக்கு சொந்தம் என்றும், அவருடைய பவர் ஏஜெண்ட் அருணாச்சல அங்குராயரிடமிருந்து 2ம் பிரதிவாதிக்கு கிரய உடன்படிக்கை ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன்

என்றால் சரி. வெங்கட்ராம ஐயரின் பவர் ஏஜெண்ட் அருணாச்சல அங்குராயர் என்பதற்கு எதாவது ஆவணத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. கிரய உடன்படிக்கை ஆவணத்தில் தாவா சொத்தின் புல எண், விஸ்தீரணம் என்ன என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் புல எண். 413/2D1 என்றும் 90 குழி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த கிரய உடன்படிக்கை ஆவணமான A6 ஆவணத்தில் இனி தாங்கள் வரும்காலத்தில் நில உரிமையாளர் மூலமாகவோ அவரது பவர் ஏஜெண்ட் அருணாச்சல அங்குராயர் மூலமாகவோ கிரயம் எழுதி பதிவு செய்து கொடுக்க சம்மதிக்கிறேன் என்று கண்டுள்ளது என்றால்சரி. அதன்படி கிரயம் எழுதி பதிவு செய்யப்படவில்லை என்றால் சரி. அவ்வாறு கிரயத்தை பதிவு செய்ய எதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் கிரயத்தை பதிவு செய்ய நடவடிக்கை எடுத்தேன் என்றாலும் அந்த சொத்து வெங்கட்ராம ஐயருக்கு சொந்தமான சொத்தில்லை என்பதால் கிரயத்தை பதிவு செய்யமுடியவில்லை என்றால் தவறு. ஒரு சொத்தை ஒருவரிடமிருந்து கிரயம் வாங்கும்போது அந்த சொத்து அவருக்கு உரிமையுடைய சொத்தாக இருக்கவேண்டுமென்றால் சரி. அவருடைய பவர் ஏஜெண்ட் மூலமாக கிரயம் பதிவு செய்யவேண்டுமென்றால் அந்த பவர் பத்திரம் பதிவு செய்யப்பட்டதாக இருக்கவேண்டுமென்றால் சரியல்ல. பவர் பத்திரம் ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. வாசாஆ 5 ஆவணத்தில் கண்டுள்ள வழக்குரை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த ஆவணத்தில் இந்த வழக்கு சொத்து யாருக்கு சொந்தம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அந்த வழக்கின் 1ம் பிரதிவாதியான ராஜமாணிக்கம் என்பவருக்கு சொந்தமானது என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த வழக்கில் அருணாச்சல அங்குராயர் ராஜமாணிக்கத்தின் பவர்

ஏஜெண்ட் என்று 1ம் பிரதிவாதி சொல்லியுள்ளார் என்றால் இல்லை. ராஜமாணிக்கத்தின் பவர் ஏஜெண்ட் அருணாச்சல அங்குராயர் என்று சொல்லப்பட்டிருந்தால் அது தவறா என்றால் ஆமாம். அதனப்படையில் தாவா சொத்திற்கு ஒரு உத்தரவு வாங்யிருந்தால் அதுவும் செல்லத்தக்கதல்ல என்றால் அதை மறுக்கிறேன். அந்த வழக்கில் 28.07.1985ல் ஏற்பட்ட கிரய உடன்படிக்கை மற்றும் 18 எண்ணிக்கை வீட்டுவரி ரசீதுகள் தான் ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த வீட்டுவரி ரசீதுகளில் வைத்தியநாத சர்மா என்று வரி விதிக்கப்பட்டவர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. தாவா சொத்தை ராஜமாணிக்கத்தின் தாயார் 07.09.1989ல் அதன் உரிமையாளர் ராஜாமணி ஐயரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. பின்னிட்டு அந்த சொத்தை அவர் யாருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 05.11.1990 தேதியில் மேற்படி மீனாட்சியம்மாள் தன் மகன் ராஜமாணிக்கம் பெயரில்அந்த சொத்து குறித்து தான செட்டில் மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இரண்டு ஆவணங்களான மீனாட்சியம்மளார் வாங்கிய கிரய பத்திரம் மற்றும் அவர் தன் மகனுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் ஆகியவை கொள்ளிடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இரண்டு ஆவணங்களும் இந்த வழக்கில் வாசாஆ 3, 4ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியாது.

G. S[illegible]

10.05.2013 அன்று விடுதலை பத்திரம் எழுதி வாங்கிவிட்டேன் என்றால் சரி. 22.01.2021 அன்று தென்புறம் உள்ள மற்றொரு சொத்தை என் சகோதரர் அறிவழகன் மற்றும் மற்றொரு சகோதரர் ராமலிங்கத்தின் மனைவி வெண்ணிலா ஆகியோரிடமிருந்து விடுதலை பத்திரம் எழுதி வாங்கிகொண்டேன் என்றால் சரி. மேற்படி விவரங்களை என் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரி. தாவா சொத்திற்கு தென்புறம் ரோடு உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக என்னுடைய சொத்து உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகில் என்னுடைய சொத்து உள்ளதால் தாவா சொத்தை கைப்பற்ற முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 2 ம்பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக கைப்பற்ற முயற்சி செய்து அதற்காக ராஜமாணிக்கம் மயிலாடுதுறை சார்புநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது தெரியுமா என்றால் தெரியாது. 10.11.1994 அன்று அந்த வழக்கில் சார்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு எண் அசல் வழக்கு எண். 170/1989 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் என் தகப்பனார் சொத்தின் வசத்தை 2 மாததத்திற்குள் ராஜமாணிக்கத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியுள்ளது என்றால் தெரியாது. மேலும், அந்த வழக்கில் 2 ம் பிரதிவாதி செலவுத்தொகையாக 7,906.75 பைசா வை ராஜமாணிக்கத்திற்கு கொடுக்கவேண்டுமென்றும் பிரதிவாதியின் செலவுத்தொகையை அவரே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் தீர்ப்பு பிறப்பித்தது தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் பிரதிவாதிகள் வாதிகளுக்கு கொடுக்க வேண்டிய எதிர்கால வருமானத்தை பொறுத்து உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 20 விதி 12 ன்கீழ் தனியாக நடவடிக்கை

G. Sri

எடுத்து கொள்ளலாம் என்று உத்தரவினை வழங்கியுள்ளது தெரியுமா என்றால் தெரியாது. அந்த தீர்ப்பிற்கு பிறகு தாவா சொத்தின் வசத்தை 2ம் பிரதிவாதி ராஜமாணிக்கம் வசமும் அவரின் தாயார் மீனாட்சியம்மாள் வசமும் ஒப்படைத்து விட்டார் என்றால் கிடையாது. அந்த வழக்குரையிலும் தாவா சொத்தின் சர்வே நம்பர் 413/2D1 எனகுறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கிலும் தாவா சொத்தின் விஸ்தீரணம் 30 சென்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அதைத்தான் நான் 90 குழி என்று கூறுகிறேன். அதில் இருந்த பழைய ஓட்டு வீட்டின் கதவு எண். 11 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த ஓட்டு வீட்டிற்கு பின்னாடி ஒரு கிணறு இருந்தது என்றால் சரி. மேற்படி சொத்து அனைத்தும் ராஜமாணிக்கத்திற்கும், மீனாட்சியம்மாளுக்கும் தான் சொந்தம் என்று மயிலாடுதுறை சார்பு நீதிமன்றம் உத்தரவு வழங்கியது என்றால் தெரியாது. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 2ம் பிரதிவாதி ராஜமாணிக்கத்திடம் எந்த ஒப்பந்தமும் செய்து கொள்ளவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. 30.06.1981 தேதியிட்ட உடன்படிக்கையின்படிதான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறேன் என்றால் சரி. மயிலாடுதுறை சார்பு நீதிமன்றம் அசல் வழக்கு எண். 170/1989 என்ற வழக்கில் கொடுத்த தீர்ப்பை நான் பின்பற்றவில்லை என்றால் சரி. மேற்படி வழக்கில் சார்பு நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை எதிர்த்து நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல செய்திருக்கிறோம். அந்த மேல்முறையீடு வழக்கு எண் சொல்லமுடியுமா என்றால் தெரியாது. என் அப்பாதான் மேல்முறையீடு செய்திருக்கிறார். எந்த நீதிமன்றத்தில் என் அப்பா மேல்முறையீடு செய்துள்ளார் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து

கொண்டேன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார். அந்த மேல்முறையீட்டில் என்ன தீர்ப்பு ஏற்பட்டது என்று என் அப்பாவிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 2010 ல் அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாக சொன்னார். அந்த உயர் நீதிமன்ற தீர்ப்பு நகல் என்னிடம் உள்ளது என்றால் சரி. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன் என்றால் செய்கிறேன். சார்பு நீதிமன்றத்தில் ஏற்பட்ட தீர்ப்பை எதிர்த்து மாவட்ட நீதிமன்றத்தில் தான் மேல்முறையீடு தாக்கல் செய்யமுடியும் என்றால் நான் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து அதன்பிறகு தான் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தோம். மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீடு எண், வருடம் தெரியாது என்றால் சரி. எனக்கு வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாது என்றாலும், தாவா சொத்தை நான் சட்டவிரோதமாக அபகரிக்க முயற்சித்து சீர்காழி உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கினை தாக்கல் செய்து தடை உத்தரவு மட்டுமே பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. சொத்து என் அனுபவத்தில் தான் உள்ளது. அதை ஏன் சட்டவிரோதமாக அபகரிக்க வேண்டும். என் அனுபவத்தில் உள்ள சொத்திற்காக ஏன் சீர்காழி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 1985 ல் எழுதிக்கொடுத்த கிரய உடன்படிக்கைபடி என் அப்பா நடந்து கொள்ளவில்லை என்று என் மாமா வழக்கு தொடுத்தார். ஆதியில் தாவா சொத்து வெங்கட்ராம ஐயருக்கு சொந்தம். அதன்பிறகு அவரின் பவர் ஏஜெண்டிடம் இருந்து என் அப்பா கிரய உடன்படிக்கை எழுதி வாங்கி

சொத்தை வசம் எடுத்தார். அசல் வழக்கு எண். 235/2013 வழக்குரையில் இந்த விவரங்கள்தான் சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அந்த வழக்கில் ராஜமாணிக்கம் தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்று சொல்லவில்லை என்றால் சரி. ராஜமாணிக்கத்தை எதற்கு 1ம் பிரதிவாதியாக சேர்த்தேன் என்றால் என் அப்பாவிற்கும் ராஜமாணிக்கத்திற்கும் வழக்கு நடந்ததால் ராஜமாணிக்கம் சொத்தின் உரிமையை கோருவார் என்பதற்காக அவரையும் பிரதிவாதியாக சேர்த்தேன். ராஜமாணிக்கத்திற்கும் என் அப்பாவிற்கும் எந்த ஆண்டு, எந்த நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் சீர்காழி சிவில் நீதிமன்றத்தில் 1990, 1991ல் வழக்கு நடந்தது. அந்த வழக்கில் வாதி, பிரதிவாதி யார் என்றால் வாதி ராஜமாணிக்கம் பிரதிவாதி என் அப்பா கணபதி. என் அப்பா பெயரில் ராஜமாணிக்கம் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்று தெரியாது. ராஜமாணிக்கம் தன் மனைவியை விவாகரத்து செய்ததாக சொல்வதால் அதற்கு நீதிமன்ற ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. முதல் மனைவி அழகுமதியை தான் நீதிமன்றம் மூலம் விவாகரத்து செய்தார். அதன்பிறகு இரண்டாவது திருமணம் செய்து கொண்டார் என்பதற்கு என்னிடம் ஆதாரம் உள்ளது என்றால் உள்ளது. அசல் வழக்கு 170/1989 வழக்கு நடந்தது தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. பின்னிட்டு அந்த உத்தரவு குறித்து மாவட்ட நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததாக சொன்னேன் என்றால் சரி. அந்த ஆவணங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் காலஅவகாசம் கொடுத்தால் தாக்கல் செய்கிறேன்.

(மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதற்காகவும் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காகவும் வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியம் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

1/4/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

01/4/25